
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1115

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

48

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# தி.மு.கழகத்தின் கொள்கைக் களம்!



ஓவியம் : சிகரன்

*1952*-ஆம் ஆண்டு, தேர்தலில் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்ட வி.எஸ்.எஸ். மணி என்பவரை தி.மு.க. ஆதரித்தது. கழக ஆதரவில் நிற்கும் அவரை வெற்றி பெறச் செய்தே ஆக வேண்டுமென்று கும்மம்பட்டி கிளைக் கழகம் கடுமையாகப் பணியாற்றியது. அந்தத் தேர்தலில் அவர் தோல்வியுற்ற போதிலும், கும்மம்பட்டி கிளைக்கழகத்தினர் ஆற்றிய தேர்தல் பணியைப் பாராட்டி, கலைமன்றத்திற்கு ஒரு சவரன் மோதிரம் வழங்கி, விருந்து வைத்துவிட்டு சென்றார். பேராசிரியர் க.அன்பழகன் முதல் தி.மு. கழகத்தின் இன்றைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வரை எண்ணற்ற தலைவர்கள் வந்து சென்ற கிராமம், கும்மம்பட்டி.

'குலக்கல்வி எதிர்ப்பு', 'மும்முனைப் போராட்டம்', 'விலைவாசி உயர்வுப் போராட்டம்' என தி.மு.க. நடத்திய முக்கிய போராட்டங்கள் அனைத்திலும் கும்மம்பட்டியில் இருந்து கைதானவர்கள் பட்டியலும் சிறைக் குறிப்பேடுகளில் தவறாமல் பதிவாகியிருக்கிறது. அதிரடியான இத்தகைய அரசியல் செயல்பாடுகளுக்கு மத்தியில், சாதி ஒழிப்புப் பணியிலும் கும்மம்பட்டி தி.மு.க. உறுதியாக நின்றது. தாழ்த்தப்பட்டவர்கள் பொங்கல் வைப்பதற்குக் கூட, நெல்லுக்காகப் பண்ணையார் வீட்டில் கையைக் கட்டி நிற்கும் அவலமும், திருவிழா காலத்தில் பறை அடிப்பவர்கள் ஊருக்குள் 8 நாட்களுக்கு நுழையக் கூடாது, படிக்க அவர்கள் பள்ளிக்குச் செல்லவே கூடாது என்ற கொடுமையும் 'கலை மன்றம்' உருவாவதற்கு முன்பு வரை கும்மம்பட்டியில் இருந்தன.

இறப்புச்செய்தி சொல்ல பறை அடித்து செல்ல வேண்டும், சுடுகாட்டில் குழி பறிக்க வேண்டும், ஊர்ப்பெரியவர்களின் காலில் விழுந்து வணங்க வேண்டும் என்றெல்லாம் சாதிக் கொடுமைகள் தலைவிரித்தாடின. பறை அடிக்கச் செல்லக்கூடாது, குழிதோண்ட செல்லக் கூடாது என அவர்களைத் தடுத்தது, கலை மன்றம். அவர்கள் வீட்டிற்குச் சென்று, 'குழந்தைகளைப் படிக்க அனுப்புங்கள்' என வற்புறுத்தினர். பறை அடிப்பதும் ராஜாஜி வலியுறுத்திய குலத்தொழில்தான். அதைத்தான் பெரியாரும் அண்ணாவும் 'கூடாது' என்கிறார்கள் என்று கலை மன்றத்தினர் மக்களுக்குப் புரிய வைத்தார்கள்.

தி.மு.கழகம் அங்கு உருவாகி, அரசியல் இயக்கமாக, கலை மன்றம் பரிணமிக்கத் தொடங்கிய பின்பும்கூட, இந்த சாதி ஒழிப்பு இயக்கமும் அங்கு தொடர்ந்தது. தொடர்ச்சியான இத்தகைய விழிப்புணர்வு காரணமாக, குறவர் சமூகத்தினர், முடி திருத்துவோரின் குழந்தைகள், செருப்பு தைப்போரின் குழந்தைகள், கூடை பின்னியோரின் குழந்தைகள், பன்றி மேய்த்தோரின் குழந்தைகள், பனைமரம் ஏறியோரின் குழந்தைகள் என ஒவ்வொரு வீட்டுக் குழந்தையையும் அவர்களின் குலத்தொழிலுக்குள் செல்லாமல் தடுத்து, கல்வி நிலையங்களை நோக்கி திருப்பியது, கலை மன்றம். கலை மன்றம் முன்னெடுத்த அந்த சமூகப் புரட்சியால் அனைத்து சமூகங்களில் இருந்தும் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் எனப் பட்டதாரிகள் பலர் உருவாகினார்கள். பல குடும்பங்களில் குலத்தொழிலுக்கு முடிவுகட்டியது, கலை மன்றம்.

கும்மம்பட்டியில் கலை மன்றம் உருவாகி, இப்போது முக்கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. மூன்று தலைமுறைகள் கடந்துவிட்டன. ஆனால், கலை மன்றத்தின் தாக்கமும் அதனால் ஏற்பட்ட மாற்றத்தில் இருந்தும் கும்மம்பட்டி சிறு துளியும் பின் வாங்கவில்லை. இன்றைய தலைமுறையில் படித்துவிட்டு வெளியூருக்கு வேலை, தொழில் நிமித்தமாகப் பலர் சென்றுவிட்டனர். ஆனால், கலை மன்றம் கட்டியெழுப்பிய தி.மு.கழகத்தின் கொள்கை களமாகவே இன்றும் திகழ்கிறது கும்மம்பட்டி!

...பயணிப்போம்.

## போலி தேசியவாதம் உருவாக்கிய ஏமாற்று!




டெல்லியில் நடைபெறும் ஏ.ஐ (AI) மாநாட்டில் ஏற்பட்ட பல குழப்பங்கள் உலக அரங்கில், இந்தியாவுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் ஏற்பாடுகளில் சரியான திட்டமிடல் இல்லாமல், சர்வதேச அழைப்பாளர்கள் அலைச்சலைச் சந்தித்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. உணவு, குடிநீர் பற்றாக்குறை, பொருட்கள் திருட்டு ஆகியவற்றால் பார்வையாளர்கள் சிரமங்களைச் சந்தித்துள்ளனர்.

அதைவிடவும் முக்கியமாக, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கல்கோட்டியாஸ் பல்கலைக்கழகம் (Galgotias University), சீன நிறுவனத்தின் ரோபோ நாய் (Orion) இயந்திரத்தைத் தங்களது தயாரிப்பு என விளம்பரப்படுத்தி, விமர்சனத்தைச் சந்தித்துள்ளது. இந்தத் தகவல்கள் வெளியாகி, சீன ஊடகங்களால் கேலிக்கு ஆளாகியுள்ளது, இந்த ஏ.ஐ (AI) மாநாடு. இந்த உண்மை தெரிந்ததும் அந்தப் பல்கலைக்கழகம் அமைத்திருந்த அரங்கை, அதிகாரிகள் மூடியுள்ளனர். அதிலும் குறிப்பாக, இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சி, இந்திய கல்வி நிறுவனங்களின் பெருமை என இந்த ரோபோவின் வீடியோவைத் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்திருந்ததுடன், சர்ச்சை உருவானதும் அதை நீக்கியுள்ளார்.

தொழில்நுட்ப தேசியவாதம் என்ற பெயரில், வெளிநாட்டுத் தயாரிப்பை 'இந்திய சாதனை' என மேடையில் காட்டும் மனநிலை, அறிவியல் வளர்ச்சிக்கு ஆபத்தானது, வெட்கக்கேடானது என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்துவருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியை விளம்பரமாக அல்ல, அடிப்படை முதலீடாகக் கருதி ஊக்குவிக்க வேண்டும். போலி தேசியவாதத்தின்மூலம் மக்களை ஏமாற்ற முடியும் என நினைத்தவர்களுக்கு டெல்லி ஏ.ஐ (AI) மாநாடு பாடம் கற்பித்துள்ளது.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

98

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# மகளிர் உரிமைத் தொகை சூழ்ச்சிகளைத் தகர்த்த திராவிட மாடல்!



***3* மாதங்களுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகையுடன் கூடுதலாக கோடைக்கால சிறப்பு நிதியையும் சேர்த்து, 5,000 ரூபாய் வழங்கியுள்ள முதலமைச்சரின் தொலைநோக்குச் செயல்பாட்டை பெண்களும் பொதுமக்களும் பாராட்டும் நிலையில், ஆதி திராவிடருக்கான நிதியிலிருந்து பணத்தை எடுத்து செலவு செய்திருப்பதாக அ.தி.மு.க.வும் அதன் ஊதுகுழல்களும் பிரச்சாரம் செய்கின்றனவே?**

அதிகாலை நேரத்தில் 5,000 ரூபாய் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன், திராவிட மாடல் ஆட்சி 2026 தேர்தலுக்குப் பிறகும் தொடரும்போது, மகளிர் உரிமைத் தொகை மாதம் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும் என 'திராவிட நாயகர்' மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்திருப்பதற்கு கட்சி எல்லைகளைக் கடந்த வரவேற்பு கிடைத்துள்ளது. தேர்தல் களத்தில் முன்னணியில் இருக்கும் தி.மு.க.வுக்கு இது கூடுதல் பலத்தையும் கொடுத்திருப்பதால், கரைந்துகொண்டிருக்கும் அ.தி.மு.க. தரப்பிலிருந்து கதறல் சத்தம் பலமாகவே கேட்கிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட எந்த நிதியும் வேறு திட்டங்களுக்கு மாற்றி பயன்படுத்தப்படவில்லை. அப்படி பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்கான சட்டத்தையும் திராவிட மாடல் அரசு நிறைவேற்றியுள்ளது. தனிப்பட்ட நபர்களுக்கு நேரடிப் பயனளிக்கும் எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அதில் பட்டியல் இனத்தவர்-பழங்குடி மக்கள் பயன்பெறும் வகையிலான உட்கூறுத்திட்டத்தின் அடிப்படையிலான சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, எந்த ஒரு பொதுத்திட்டத்திலும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான 18% முதல் 20% வரையிலான நிதியை ஒதுக்கீடு செய்வதை இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடு உறுதி செய்கிறது.

எடுத்துக்காட்டாக, ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு சிறப்பு உதவித்தொகை, அவர்களுக்கான விடுதி ஆகியவற்றுக்கு பொது பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதி முழுவதும் பட்டியல் இன-பழங்குடி மக்களுக்காக செலவிடப்படும். அதுபோல, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற பொதுவான திட்டங்களில், 18% முதல் 20% வரை பட்டியல் இன-பழங்குடி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதை அந்தந்த துறைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி 13 ஆயிரம் கோடி ரூபாய். இதில் 18% முதல் 20% வரையிலான தொகை பட்டியல் இனத்தைச் சேர்ந்த-பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கான தொகையை வேறு சமூகத்தினருக்கு வழங்கக்கூடாது. அந்த வகையில், பொது நிதியிலிருந்து பட்டியல் இன-பழங்குடி சமூகத்தினருக்குரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பட்டியல் இன-பழங்குடியினருக்கான நிதியிலிருந்து எதுவும் எடுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்டுள்ள தொகை அந்த சமூகத்திலுள்ள பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாயாக வழங்கப்படும். இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் நடைமுறை.

அ.தி.மு.க. என்பது எப்போதுமே தி.மு.க.வுக்கு எதிரானது. நீதிக்கு எதிராக அநீதி, நியாயத்திற்கு எதிராக அநியாயம் என்பதுபோல, அரசின் திட்டங்களின் செயல்பாடுகளிலும் உண்மைக்கு எதிராகவே பேசி, பொய்யைப் பரப்ப நினைத்து அம்பலப்பட்டுள்ளது அ.தி.மு.க.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.அப்துல் அஜீத்



### தந்தை வழியில்... தலைவர் அணியில்...

1982-ஆம் ஆண்டு வாக்கில், இளைஞர் அணி கட்டமைப்புப் பணிகளுக்காக, அன்றைய ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டம், இன்றைய கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை பேரூரில் இளைஞர் அணி கூட்டம் நடைபெற்றது. என்து தந்தை ஏ.எம்.முகமது யூசுப், மங்களம்பேட்டை பேரூர் கழகத் துணைச் செயலாளராக இருந்து, தலைவருக்கு வரவேற்பு அளித்தார். மேடையில், தலைவர் கழக நிர்வாகிகளுடன், எனது தந்தையார் இடம்பெற்றுள்ள இந்தப் படம், எனது அரசியல் பணிகளுக்கு, என்றும் உந்துவிசையாகத் திகழும்.

– **எம்.அப்துல் அஜீத், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், மங்களம்பேட்டை, கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நெருக்கடி காலத்தில் கருத்துரிமைக் குரல்!

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை காலத்தில், கழகத்தின் மாவட்ட மாநாடுகள், கருத்துரிமைக் களங்களாக விளங்கின. 1975 ஆகஸ்ட் மாதத்தில் நெல்லை, சேலம் மாவட்ட ஐந்தாவது மாநாடு, அக்டோபரில் புதுக்கோட்டை மாவட்ட முதல் மாநாடு, நவம்பர் மாதம், மதுரையில் கழக மகளிர் மாநாடு, குமரி மாவட்ட 3-வது மாநாடு ஆகியவை நடைபெற்றன. மிகக் குறுகிய காலத்தில் மாவட்ட கழக மாநாடுகளுடன், டிசம்பர் மாதத்தில், 20 லட்சம் பேர் திரண்ட கோவை மாநில மாநாட்டினையும் நடத்தினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131